Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 153**/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**17 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இளங்கோவன் |
| Father Name | : | மாணிக்கம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2023.

(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் டவுன் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்த சமயம் 06.03.2021ம் தேதி பணியில் இருந்தபோது கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண். 150/2021 இதச பிரிவுகள் 294பி, 323, 302 இவ்வழக்கில் இறந்துபோன பனையடியான் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று இராமநாதபுரம் அரசு மருத்துவமனை

பணி மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். பிரேத பரிசோதனை முடித்து முடித்து பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.**153/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | } | Prosecution – **PW**16 | |
| Deposition of witness for | | } | Defence – | |
| | | } | Court – | |

| | | |
|---|---|---|
| Name | : | திருமுருக கண்ணன் |
| Father/Husband Name | : | சீதாராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2023

(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)

முதல் விசாரணை–

நான் தற்போது கேணிக்கரை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு நான் கேணிக்கரை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த சமயம் 05.03.2021ம் தேதி இரவு 20.30 மணிக்கு நான் பணியில் இருந்தபோது கேணிக்கரை காவல் நிலைய குற்ற எண்.150/2021 இதச பிரிவு 294 பி, 323, 302 வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையினை துரித தபாலாக பெற்று இராமநாதபுரம் நீதித்துறை நடுவர் எண்–2 நீதிமன்றத்தில் ஒப்படைத்தேன். அதன் நகல்களை சம்மந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கேணிக்கரை காவல் நிலையத்திலிருந்து நீதிபதியின் குடியிருப்பிற்கு 10 நிமிடத்தில் நடந்து வந்துவிடலாம் என்று சொன்னால் சரிதான்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C. 153**/2022 |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW**15 |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | செல்வம் |
| Father/Husband Name | : | நாகு |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.02.2023

<u>(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர்.)</u>

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் வட்டம் அச்சுந்தன்வயல் குரூப் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.03.2021ம் தேதி இராமநாதபுரம் வட்டம் பட்டினம்காத்தான் குரூப் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது கேணிக்கரை காவல் ஆய்வாளர் அழைத்தன்பேரில் நானும், கிராம உதவியாளரான ஜெகதீசன் என்பவரும் ஈசிஆர் ராம்நகர் பஸ்நிறுத்தத்திற்கு சென்றபோது அங்கு கேணிக்கரை காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கின் எதிரியான நவநீத கிருஷ்ணன் என்ற கஜேந்திரன் என்பவரை ஆய்வாளர் அவர்கள் எங்களிடம் அறிமுகம் செய்துவைத்தார். அதன் பிறகு எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம உதவியாளர் ஜெகதீசன்

என்பவரும் கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரி தன்னை அழைத்துச்சென்றால் சம்பவத்தில் பயன்படுத்திய ஆயுதத்தை எடுத்துத் தருவதாக சொன்னார். அதன் அடிப்படையில் நானும், கிராம உதவியாளர் மற்றும் ஆய்வாளர், போலிஸ் பார்ட்டியுடன் ஆர்எஸ் மடை EB ஆபிஸ் தெற்குப்பக்கம் காம்பவுண்ட் அருகில் உள்ள வேலிக்கருவேல் தூரிலிருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த மரப்பிடியிலான இரத்தக்கறையுடன் கூடிய கொடுக்கருவாள் ஒன்றை ஆஜர் செய்ததை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், கிராம உதவியாளர் ஜெகதீசன் என்பவரும் கையெழுத்து செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8. அத்தாட்சி அ.சா.ஆ.9. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பல வழக்குகளில் பல நீதிமன்றங்களில் காவல் துறை சார்பாக ஆஜராகி சாட்சியம் அளித்திருக்கிறேன் என்றால் சரிதான். ஆய்வாளர் எனக்கு இந்த வழக்கின் 2ம் எதிரியை பிடித்து வைத்திருக்கிறோம் உடனடியாக வாருங்கள் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் தான் சென்றேன். அப்போது நான் இராமநாதபுரம் ஓம்சக்தி நகரில் உள்ள என் அலுவலகத்தில் இருந்தேன். கிராம உதவியாளரும் என்னுடன் இருந்தார். எனக்கு தகவல் வரும்போது மணி காலை 11.00 மணி இருக்கும். அதற்கு பின்பு தான் கிளம்பினேன். ராம்நகர் முக்கியமான பேருந்து நிறுத்தம் என்றால் சரிதான். சாலையின் இரண்டு பக்கங்களிலும் வீடுகள், கடைகள் இருக்கிறது என்றால் சரிதான். நாங்கள் இருவரும் இருசக்கரவாகனத்தில் சென்றோம். ராம்நகர் பேருந்து நிறுத்தத்தில் வைத்து ஆய்வாளர் மடிக்கணினியில் டைப் செய்தார். அங்கேயே வைத்து தட்டச்சு செய்து எடுத்ததில் அங்கேயே வைத்து தான் அ.சா.ஆ.8.ல் கையெழுத்து செய்தேன். அதேபோல அ.சா.ஆ.9 உள்ள ஆவணமானது எந்த தட்டச்சும் செய்யப்படவில்லை. கையால் காவல் நிலைய எழுத்தர் எழுதியதில் தான் நான் கையெழுத்து போட்டேன். ஆர்எஸ் மடை EB ல் உள்ள காம்பவுண்ட் சுவர் தெற்குப்புறமாக உள்ள வேலிக்கருவேல் புதரில் இருந்து தான் எடுத்துக்கொடுத்தார். அந்த ஆயுதம் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததா என்பது எனக்கு தெரியவில்லை. அது திறந்தவெளி தான். யார் வேண்டுமானாலும் சென்று வரலாம். அந்த இடம் பற்றி குறிப்பிட்டு என்னால் சொல்லமுடியாது. நான் சொன்ன மாதிரி சொன்ன தினத்தில்

நான் எந்த இடத்திற்கும் செல்லவில்லை என்றும் நான் எதையும் பார்க்கவில்லை என்றும் என் முன்னால் யாரும் எந்தவிதமான வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் அதன் அடிப்படையில் எந்த பொருளும் எங்கிருந்தும் எடுத்துக்கொடுக்கவில்லை என்றும் நான் கையெழுத்து செய்த ஆவணங்கள் அனைத்தும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையெழுத்து போட்டிருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் போலிசாருக்காக இருப்பு சாட்சியாக இருந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.